**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.14/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**4 |
| Name | : | **முத்துசாமி** |
| Father Name | : | **அசோகரத்தினம்** |
| Address | : | **அரணாரை** |
| Age | : | 21/2025 |

**தேதி : 13.08.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் அரணாரையில் வசித்து வருகிறேன். நான் பி.எஸ்.சி கணிதம் முடித்துவிட்டு பி,எட் படித்துவருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 20.12.2023 அன்று காலை 11.00 மணி அளவில் நானும், எனது தந்தையும் எங்களது வயலில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது பெரம்பலூர் ்போலீஸார் அ.சா.1க்கும், எதிரிக்கும் இடையே நடந்த பிரச்சனை சம்மந்தமாக விசாரிக்க வந்திருந்தார்கள். **பார்வை மகசர் அ.சா.ஆ. 2 ஆகு குறியீடு செய்யப்படுகிறது.** அதற்கு சாட்சியாக நானும், எனது தந்தை அசோகரத்தினம் என்பவரும் கையொப்பம் செய்தோம். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எங்களது வயல் கிணற்றிற்கு வடக்கு பக்கம் உள்ளது. விசாரணைக்கு வந்தவர் போலீஸ் உடை அணிந்திருந்தார். அவர் எந்த பதவியில் இருக்கிறார்

என்பது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் போலீஸார் வாங்கிய கையெழுத்து கேணி மேட்டு பகுதியில் என்னிடம் கையொப்பம் வாங்கினார். சம்பவம் பற்றி விசாரித்தோம் என்று மேலே எழுதியிருந்தார்கள், அதன் கீழ் நான் கையொப்பம் செய்தேன். போலீஸார் கேணி மேட்டு பகுதியில் கையில் வைத்துகொண்டு எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார். புகார்தாரர் எனது அண்ணன் முறை உறவினர் ஆவார். போலீஸார் வந்தார்கள் என்று சொல்வது பொய் என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கிகொண்டார்கள் என்றாலும்சரியல்ல. விசாரணையின்போது என் அப்பா, நான், பாப்பா ஆகியோர் இருந்தோம். புகார்தாரர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.